தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - **2016**

**D031** இலக்கணம் – 4 (யாப்பு, அணி)

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. யாப்பருங்கலக்காரிகை நூல் எந்த யாப்பினால் ஆனது?
2. அசைக்குரிய உறுப்பாகிய எழுத்துகள் பதின்மூன்றனையும் எத்தனை பாகுபாட்டில் அடக்கலாம்?
3. மூன்றடியால் ஆகிய வெண்பாவின் பெயர் தருக.
4. வஞ்சி விருத்தம் எவ்வடியால் வரும்?
5. ஐகாரக் குறுக்கம் எவ்வாறு அலகிடப் பெறும்?
6. வாழ்த்து எத்தனை வகைப்படும்?
7. உவமை அணியிலிருந்து தோன்றிய முதல் அணி யாது?
8. தொடையும் தொடை விகற்பங்களுமாக மொத்தத் தொடைகள் எத்தனை?
9. சொல்லின்பம் எவ்வெவ் வகைகளில் அமையும்?
10. தண்டியலங்காரம் கூறும் பொருள் அணிகள் எத்தனை? சொல்லணிகள் எத்தனை?
11. பொருளால் தொகுக்கப்பட்ட நூல்களுக்கு இரண்டு சான்று தருக.
12. சீர் எத்தனை வகைப்படும்?
13. காப்பிய முகப்பு எவ்வாறு அமையும்?
14. ஏது அணி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
15. எண்வகைச் சுவைகளுள் மூன்றினைக் கூறுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**
**(5x3=15)**

1. வனப்பு என்றால் என்ன? எண்வகை வனப்புகள் யாவை?
2. விகற்பம் உடைய தொடைகள் குறித்து எழுதுக.
3. வெண்பாவின் பொது இலக்கணம் – விளக்குக.
4. வருக்க எதுகை, இன மோனை – விளக்கம் தருக.
5. தனி அணியிலக்கண நூல்கள் – பட்டியலிட்டு விளக்குக.
6. தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணத்தினை எடுத்துரைக்க.
7. தன்மையணியின் வகைகளை எடுத்துரைக்க.
8. ஒட்டு அணியின் இலக்கணத்தினை விவரிக்க.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) அசைக்கு உறுப்பாகும் எழுத்துகள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) தளையின் இலக்கணம் கூறி, எழுவகைத் தளைகளை விளக்கியுரைக்க.

2. (அ) பாக்களுக்குரிய அடி, ஓசை குறித்து விவரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) கலிப்பாவின் இனங்கள் குறித்துத் தொகுத்துரைக்க.

3. (அ) உவமை அணியின் இலக்கணத்தினை அதன் வகைகளோடு விவரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) செய்யுள் நெறி குறித்தும் அதன் வகைகள் பற்றியும் விளக்குக.

***